பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6·00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 20 ஞாயிற்றுக்கிழமை (06-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 232

# அகதிகள் தமிழகம் வருவதை தடுக்க
# இலங்கை - இந்தியா கூட்டு முயற்சி!

## துப்பாக்கி சூட்டில் இறந்த வயோதிபர்

யாழ்ப்பாணம், ஒக், 6

தட்டாதெரு தடைமுகாம் பகுதியில் நேற்று அதிகாலை 3. 30 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் 75 வயதுடைய வயோதிபர் ஒருவர் இறந்தார்.

தடைமுகாமை நோக்கி வந்த மூவரை திரும்பிச் செல்லுமாறு கோரப்பட்டதாகவும்—

அதில் இருவர் ஓடிவிட்டனர் என்றும்— பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த வயோதிபரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளதாகவும்—

இவரின் உடம்பில் வேட்டித் துண்டு ஒன்று மட்டும் காணப்பட்டதாகவும்—

உறவினர் அடையாளம் காட்டி சடலத்தைப் பெறுமாறும்—

யாழ். பொலீஸ் நிலையத்தினர் கேட்டுள்ளனர்.

(இ-3-15-145)

## குஜ்ரால் – கதிர்காமர் சந்திப்பில் இணக்கம்

நியூயோர்க், ஒக்ரோபர் 6

இலங்கையிலிருந்து தமிழ் அகதிகள் இந்தியா செல்வதைத் தடுப்பதில் இலங்கையும் இந்தியாவும் இணைந்து செயற்பட உள்ளன.

நியூயோர்க் சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ராலுக்கும் இடையில் இது தொடர்பாக நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இணக்கம் ஏற்பட்டுள்ளது.

ஐ. நா. வின் பொதுச் சபைக்கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக இரு நாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் நியூயோர்க் வந்துள்ளனர்.

அப்போதே இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இலங்கையில் தற்போது இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கை —

அதனைத் தொடர்ந்து இலங்கைத் தமிழ் அகதிகள் மீண்டும் இந்தியா செல்ல ஆரம்பித்திருப்பது — ஆகியவை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## டென்மார்க் தமிழர்கள் உண்ணாவிரதம் இருப்பர்

தாம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவதை ஆட்சேபித்து டென்மார்க்கில் உள்ள 113 இலங்கைத் தமிழர்கள் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர்.

கடந்த ஜுலை மாதத்தில் இருந்து 400 இலங்கைத் தமிழர்களின் அரசியல் தஞ்சக் கோரிக்கை டென்மார்க் அரசினால் நிராகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாம் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்பட்டால் அங்கு, கைதுசெய்யப்படலாம் என அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (இ-10)

## மருதமுனை சம்பவங்கள் குறித்து நீதி விசாரணை

### கூட்டணி கோரிக்கை

கொழும்பு, ஒக். 6

அம்பாறை மாவட்டம், மருதமுனைச் சம்பவம் குறித்து நீதி விசாரணை நடத்தப்பட்டு கொலைகாரர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அரசு இதற்கென உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலோப்பளையில் 4 படையினர் பலி!

கொழும்பு, ஒக். 6

யாழ்ப்பாணம் தென்மராட்சி புலோப்பளையில் இராணுவத்தின் முன்னணிக் காவலரணுக்குள் விடுதலைப்புலிகளின் குழு ஒன்று நேற்று அதிகாலை ஊடுருவ எத்தனித்த போது புதிதாகச் சண்டை மூண்டதாக இலங்கை வானொலி அறிவித்தது.

புலிகள் சிறு ஆயுதங்களையும் மோட்டார்களையும் ஆர்.பி.ஜி ரக ஆயுதங்களையும் பயன்படுத்தித் தாக்கினார்கள் என்றும் —

படையினர் சிறு ஆயுதங்கள், இயந்திரத் துப்பாக்கிகள் போன்றவற்றைப் பயன்படுத்தித் தாக்குதலை முறியடித்தனர் என்றும் —

இச்சண்டையில் 4 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் —

மற்றொரு சிப்பாய் காயமடைந்தார் என்றும் —

இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

இந்தச் சண்டையில் புலிகளுக்கு பெரும் உயிர்ச் சேதம் ஏற்பட்டதை தரைப்படையினர் ஊர்ஜிதம் செய்தனர் என்றும் அது தெரிவித்தது. (உ-3-10)

## 3 கப்பல்களில் 471 பேர் யாழ்ப்பாணம் வந்தனர்

யாழ்ப்பாணம், ஒக். 6

திருகோணமலையில் இருந்து 3 கப்பல்களில் வந்த 471 பயணிகள் நேற்றுக் காலை யாழ். நகர் வந்து சேர்ந்தனர்.

வன்னியில் இருந்து வவுனியா சென்றவர்களும், அரச ஊழியர்களுமே இக்கப்பலில் வந்தனர்.

யாழ்ப்பாணத்தில் கைதாகி வீரவில தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையான 32 இளைஞர்களும் இக்கப்பலில் வருவர் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் வரவில்லை என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மற்றொரு தொகுதி பயணிகளை எதிர்வரும் 10 ஆம் திகதி இக்கப்பல்களில் அழைத்து வர ஏற்பாடாகி இருப்பதாக திருகோணமலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இருந்து வவு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு அரச வெற்றிடங்களுக்கு இங்குள்ளோரையே நியமிக்க பணிப்பு

கொழும்பு, ஒக். 6

யாழ் குடாநாட்டில் அரச திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் மற்றும் சபைகளில் ஏற்படும் வெற்றிடங்களை அந்தப் பகுதியில் உள்ளவர்களைக் கொண்டே நிரப்புமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சர்களைப் பணித்துள்ளார்.

அதே சமயம் இந்த வெற்றிடங்களுக்கு வெளியிடங்களில் இருந்து ஆட்களை நியமிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் —

யாழ். அரச அதிபரின் தலையீட்டை அடுத்தே இது முறியடிக்கப்பட்டதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் —யாழ் அரசஅதிபரின் கண்காணிப்புடன் —தொழில் வங்கி ஒன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு இயங்குவதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவித்தன (உ-150

## தமிழ் மக்களுடன் பேச்சு நடத்தக்கூடிய திட்டத்தை அரசு தயாரிக்க வேண்டும்

### விக்கிரமபாகு கருணாரத்ன பி. பி. ஸிக்கு பேட்டி

கொழும்பு, ஒக். 6

★ தமிழ் மக்களுடன் பேச்சு நடத்தக் கூடிய திட்டம் ஒன்றை அரசு தயாரிக்க வேண்டும்.

★ தமிழர் பிரதேசங்களிலிருந்து சிங்கள இராணுவத்தை வாபஸ் பெற வேண்டும்.

அரசாங்கம் இந்த இரு விடயங்களிலும் கவனம் செலுத்தி அவற்றை நிறைவேற்றா விட்டால் சமாதானப் பேச்சுக் குறித்துப் பிரஸ்தாபிப்பதில் பயனேதும் ஏற்படப் போவதில்லை.

நவசமசமாஜக்கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, பி பி. ஸியின் தென் கிழக்காசிய சேவைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

தமிழர்களிடமிருந்து அரசாங்கம் ஆயுதங்களைக் களைந்து விட்டால் கூட அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உண்டா? இல்லையே!

தமிழ்க் கட்சிகள் — குறிப்பாக அரசுக்கு ஆதரவை வழங்கும் தமிழ்க் குழுக்கள்— அதிகாரப் பகிர்வைக் கோருகின்றன. ஆனால் அதற்கான திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

புலிகளைத் தவிர அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் அரசுடன் பேசத் தயாராக இருக்கின்றன. ஆனால் அரசு தற்போது வைத்துள்ள தீர்வுத் திட்டம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் திருப்தி செய்வதாக இல்லை என்றும் அவை கூறுகின்றன. இந் நிலையில் பேச்சு நடத்துவதால் என்ன பயன்?— இவ்வாறு கலாநிதி விக்கிரமபாகு மேலும் கேள்வி எழுப்பினார்.

(உ-10)

### ஊரடங்கு நேரம் நீடிப்பு

குடா நாட்டில் நேற்று முன்தினம் முதல் ஊரடங்கு நேரம் ஒன்றரை மணித்தியாலம் நீடிக்கப்பட்டிருக்கின்றது.

இதன்படி இதுவரை இரவு எட்டு மணி முதல் காலை ஆறு மணிவரை நடைமுறையில் இருந்த ஊரடங்கு —

இனிமேல் இரவு ஏழு மணி முதல் காலை 6.30 மணி வரை (பழைய நேரப்படி இரவு ஆறு மணி முதல் காலை 5.30 மணி வரை) நடைமுறையில் இருக்கும் என்று படைவட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## ஆசிரியர் தின வாழ்த்து

யா. மானிப்பாய் சென்ற். ஆன்ஸ். றோ. க. த. க. பாடசாலை அதிபர், ஆசிரியர்களை வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

நாயகபாலன் ஸ்ரோர்ஸ்,
மானிப்பாய்.

(43053)

## இன்று முதல்!

## OL 96 DEC. துரித மீட்டல் வகுப்பு

கணிதம்: திரு. வரதன் ஆசிரியர்
ஏனைய பாடங்களும்
அவ்வாறே சிறப்பு மிக்க ஆசிரியர்கள்.

ESTD:-1973 REGD:-№ J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY.

(43045)

## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா கமலம்

விக்னா கல்வி நிறுவன சமூகக்கல்வி ஆசிரியராகிய க. கோபி அவர்களின் தாயார் கந்தையா கமலம் அவர்கள் இறைபதம் அடைந்ததையொட்டி துயருறும் அவர் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

ஆண்டு 10 மாணவ, மாணவிகள்
விக்னா கல்வி நிறுவனம்.

(43050)

## 31-ம் நாள் நினைவலைகள்

எமது கல்வி நிறுவனத்தின் சமூகக்கல்வி
ஆசிரியர் கோபி அவர்களின் தாயார்

### திருமதி கந்தையா கமலம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தை தெரிவிப்பதுடன் ஆவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். கல்வி நிறுவன
11 ஆம் ஆண்டு மாணவ, மாணவிகள்.

ஆனைக்கோட்டை. (43033)

## OL 1996 DEC.

சகல பாடங்களுக்கான

**PAPER CLASS**

ஆரம்பம்:-
09–10–96 (புதன்)

**புதிய நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(43014)

இராமநாதன்
நுண்கலைத்துறை
மாணவர்க்கான

## கூட்டம்

நாளை 07-10-96 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு (பழைய நேரம்) இராமநாதன் நுண்கலைக் கழக அறிமுறை மண்டபத்தில் நடைபெறும். இதில் சகல ஆண்டு மாணவர்களையும் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நுண்கலைத்துறை
பிரதிநிதி

(43035)

## வாங்கவும் விற்கவும்

பழைய பாடசாலைப் புத்தகங்கள், தமிழ், ஆங்கில நாவல்கள், சஞ்சிகைகள் மற்றும் சகல விதமான புத்தகங்கள் நியாயமான விலையில் வாங்கவும் விற்கவும் தொடர்பு கொள்ளவும்.

**பாலன்**
புத்தக நிலையம்

இல. 87, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம் (வைத்திஸ்வரா கல்லூரி அருகாமையில். (43043)

பருத்தித்துறை நகராட்சிமன்றம்

## 1997 ஆம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் குத்தகைகள் சார்பில் **01-01-1997** ஆம் திகதி தொடக்கம் **31-12-1997** ஆம் திகதி வரைக்கான காலப்பகுதிக்குரிய கேள்விகள் **18-10-1996** ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் பருத்தித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் **17-10-1996** ஆம் திகதி பிற்பகல் 3-30 மணி வரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் பணமாகச் செலுத்துவதன்பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் ''செயலாளர், நகராட்சிமன்றம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டுத் தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில். உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விவரங்களையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை

| குத்தகை விவரம் | ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. மரக்கறிச் சந்தை (கடைகள் நீங்கலாக) | ரூ. 1,38 000/- | ரூ. 1,500/- | ரூ 150/- |
| 2. மீன் சந்தை | ரூ. 21,000/- | ரூ. 1,500/- | ரூ. 150/- |
| 3. வாகன, வண்டிக்காலை | ரூ. 9,500/- | ரூ. 1,500/- | ரூ 150/- |
| 4. மிதிவண்டிப் பாதுகாப்பு நிலையம் | ரூ. 37 000/- | ரூ. 1,500/- | ரூ. 150/- |
| 5. மாட்டிறைச்சிக் கடை | ரூ. 1,39 000/- | ரூ. 1,500/- | ரூ. 150/- |
| 6. ஆட்டிறைச்சிக் கடை | ரூ. 13000/- | ரூ. 1,500/- | ரூ. 150/- |

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை, 01-10-1996

(சி-3240)

## அருள்மிகு ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலயம்

(சோலை அம்மன்)
சாவகச்சேரி.

எமது ஆலயத்திற்குரிய சித்திரத்தேரினது பழுதுற்ற சக்கரங்களைப் புதிதாக நிர்மாணிப்பதற்கேற்ற மருதமரம் மரமாகவோ அல்லது அறுத்த துண்டங்களாகவோ தேவைப்படுகின்றது. வைத்திருப்போர் விலை விவரங்களுடன் தொடர்புகொள்க.

க. கிருபானந்தக் குருக்கள்
பிரதம குரு

(43031)

## ஆசிரியர் தின வாழ்த்துக்கள்

ஆத்ம புருஷர்கள் ஆதிசிவன் அவதாரங்கள்
ஞாலத்தின் ஞானத்தை திறக்கும் மெழுகு திரிகள்
நீங்கள் ஸ்கந்தவரோதயா வளர்பிறை வானங்கள்
ஆழமான ஆழிதனை அறிவாலே புகட்டிடுவீர்
அரிவரியில் ஏடெடுத்து அத்துவித முத்திதனை
அழகாக புரியவைப்பீர்
அந்த நன்றி மறப்போமா? அறியாது நடப்போமா?
மலர் பாதம் துடைக்கின்றோம்.
மனதாலே போற்றிடுங்கள் – எமை
மாணவராய் ஏற்றிடுங்கள்
போற்றிடுவோம் எங்கள் ஆசிரிய குழுவை
பொலிவுடனே மன்றத்து மாணவர் கூடி
வாழ்த்துகின்றோம் எங்கள் அறிவொளித் தாயை

யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி
கலை, வர்த்தக மாணவர்

(43047)

யா/ இணுவில் மத்திய கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

## விசேட பொதுக் கூட்டம்

காலம்: **1996 – 10 – 12** சனிக்கிழமை
பிற்பகல் 3.00 மணி

இடம்: கல்லூரி மண்டபம்

தலைவர்: திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை
(அதிபர்)

கல்வித்திணைக்களச் சுற்று நிருபத்துக்கு அமைய உத்தியோகத்தர் தெரிவு மீள இடம் பெற இருப்பதால் இப் பாடசாலையின் சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

செ. சோதிப்பெருமாள்
அதிபர். செயலாளர்

(சி- 3236)

## 31 ஆம் நாள்

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி
1995 ஆம் வருட உயர் பிரிவு மாணவன்

### இரத்தினம் ஜெயன்

[கைதடி தெற்கு]

05 - 09 - 1996 அன்று கொழும்பில் காலமானார் என்ற செய்தி எம்மையெல்லாம் ஆழ்ந்த துயரத்திற்கு ஆளாக்கி விட்டது. எம்முடன் கல்விபயின்ற இனிய நாள்களை நினைவு கூர்ந்து, அவரின் பிரிவால் துயருறும் பெற்றோர், உடன் பிறப்புக்கள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி உயர் பிரிவு
1995ஆம் ஆண்டு மாணவர்கள்.

(43024)

## நினைவு கூருகிறோம்

திருமதி

### விமலாசினி தெய்வேந்திரம்

எமது பாடசாலையின் உன்னத வளர்ச்சிக்கு அயராது உழைத்து, சிவபதம் எய்திய மதிப்புக்குரிய திருமதி விமலாசினி தெய்வேந்திரம் அவர்களை ஆசிரியர் தினமாகிய இன்று (1996-10-06) நினைவு கூருகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர் சங்கம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/இடைக்காடு மகா வித்தியாலயம்,
அச்சுவேலி. (43000)

# நற் சமுதாயத்தைப் படைக்கும் ஒப்பற்ற சிற்பிகள் ஆசிரியர்கள்

இலங்கையில் பத்தாயிரத்து 441 அரசாங்க பாடசாலைகளில் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ஆசிரியர்கள் சமுதாயச் சிற்பிகளாகத் தொழிற்படுகின்றார்கள். 43 இலட்சம் மாணவர்களின் வளர்ச்சியும் விருத்தியும், நிகழ்காலமும் எதிர்காலமும், அவர்களின் கைகளில் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் வருடந்தோறும் நான்கு இலட்சம் மாணவர்கள், இவர்களை நம்பிப் புதிதாகப் பாடசாலைகளில் பிரவேசிக்கின்றார்கள்.

மாணவர்களைப் புதிய சமுதாயமொன்றுக்குப் பொருத்தமான புதிய மனிதர்களாக வளர்த்தெடுப்பது இந்த ஆசிரியர்களின் பொறுப்பு. அதனை நிறைவேற்ற தேசத்தின் கல்வித்திட்டமானது பாடவிதானம், பாடத்திட்டம் என்ற வடிவங்களில் அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

### பதில் சொல்ல வேண்டியவர்கள்

சுதந்திரம், ஜனநாயகம், விடுதலை, சமாதானம். ஐக்கியம், சமத்துவம், சகோதரத்துவம், சுபீட்சம், அன்பு, பண்பு, நீதி ஆகிய தோற்றப்பாடுகள் — விழுமியங்கள் — அர்த்தமுள்ளனவாக அமையும் ஆனந்தமான வாழ்க்கைக்கும், தொழிலுக்கும் மாணவரைத் தயார்ப்படுத்துவது, ஆசிரியர்கள் தாங்கும் பலவித சுமைகளிற் பெரியது.

> இன்று அனைத்துலக ஆசிரிய தினம். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

மாணவர் ஒவ்வொருவரும் சமூகத்தின் அங்கத்தவராகவும், தனிப்பட்ட நபராகவும், பின்பற்றுபவராகவும், வழிகாட்டுபவராகவும், பெறுபவராகவும், கொடுப்பவராகவும், அணியின் அங்கத்தவராகவும், ஆற்றல் மிக்க அணித்தலைவராகவும், செயற்பட வளர்த்தெடுப்பது மற்றையது

இயற்கையின் சீற்றத்தால், மனிதனின் அறியாமையினால் ஏற்படுத்தப்படும் எதிர்பாராத அனர்த்தங்களுக்கு— அழுத்தங்களுக்கு — ஈடுகொடுக்கும் திறன்களை, திறமைகளை ஊடு நவும் கற்பனா

### - படியாதவன் -

சக்தியுடன் கண்டறிந்து, எதிர் கொள்ளும் ஆற்றலை அவர்களில் தோற்றுவிப்பது இன்னொன்று.

குரோதம், அச்சம், வெறுப்பு, கோபம் தவிர்த்து சாதி, இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் மிதந்து, தம்மைப்பற்றிய ஒரு சமநிலையான மனப்பாங்குள்ள மனிதர்களாக மாணவர்களை வளரச்செய்வதுஅடுத்தது.

தெளிவாகவும் தெய்வ நீதியுடனும் சிந்திக்கும் உள ஆற்றலையும், வஞ்சிக்கும் வம்புக்கிழுக்கும் கயவர்களுக்குப் பொத்திய கையினால் விடைபகரக் கூடிய திடகாத்திரமான உடற்பலத்தையும், மாணவர்களில் உறுதிப்படுத்துவது பிறிதொன்று.

தக்க தருணத்தில் பயமோ பாரபட்சமோ இன்றி, சரியான முறையில் தாமதமின்றி செயற்படும் நல்ல மனப்பழக்கத்தை மாணவர்களில் விருத்தி செய்வது வேறொன்று.

தனது உழைப்பை விஞ்சி நிற்காத வாழ்க்கையில் திருப்தி கண்டு, சிறுமைகள் தவிர்த்து, பெருமைகள் பெருக்கி வாழும் வாழ்க்கை முறைக்கு வித்திடுவது மேலுமொன்று.

இவை போன்ற இன்னும் எத்தனையோ பாரிய கைங்கரியங்களை, இடர்ப்பாடுகள் நிறைந்தகல்விச்சேவை மூலம், பாடசாலையின் மைய அரங்கான வகுப்பறையில் தமது அறிவு, திறன், ஈகம் அத்தனையையும் அர்ப்பணித்து நிறைவேற்றும் மாமனிதர்களே இந்த ஆசிரியர்கள்.

அரசியல், சமூக, பொருளாதார, ஆத்மீக, அறநெறிப் பண்புகளில், மக்களைப் பாதிக்கும் தளப்பங்கள் ஏற்படும்போது பதில் சொல்ல வேண்டிய சமூகக்கடப்பாடும், சமுதாய பிரக்ஞையும் உடையவர். தாம் என்ற அச்சத்துடன் தொழிற்படுகின்ற — தொழிற்பட வேண்டிய — ஒரேயொரு கூட்டத்தினர் இவர்களே.

### ஆசிரியம்

ஆசிரியம் காய்ந்த ஒரு தொழில் நுட்பம் அல்ல. அறிவின் துரிதவளர்ச்சிக்கு, சமுதாய முற்பெயர்வுகளுக்கு ஈடுகொடுத்து, இசைவாக்கி, ஒன்றிணைந்து தொழிற்படக்கூடிய — தொழிற்பட வேண்டிய — ஆற்றல்களின் — சமநிலை குலையாத இயக்கம் (Dynamism) அது.

### பட்டியடைப்பு

இந்த ஒப்பற்ற வாண்மையில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களுள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஒருங்கிணைந்து உச்சநிலை அடைந்தவர்கள் ஆயிரக்கணக்கானோர். பலவித ஆற்றல்களை கொடையாகப் பெற்றவர்கள் கணிசமான தொகையினர். வாண்மைக்கென, உளச் சார்பும் சாயலும் பெற்று, ஆசிரியர்களாகப் பிறந்தவர்கள் பலர். வேண்டா வெறுப்புடன் தொழிற்படுவோரு முளர். இது எண்ணிக்கையின் காரணத்தால் இயற்கையாக ஏற்படும் தவிர்க்க முடியாத நிகழ்தகவு.

இயற்கைத் தேர்வு இப்படியிருக்க இவர்கள் எல்லோரும் ஓய்வு பெறும்வரை ''உதவியாசிரியர்'' என்று அன்றிலிருந்து ஒரேபட்டியில் அடைக்கப்படுகின்றனர். இந்தப் பட்டியடைப்பால் பெருங் கூட்டமொன்றின் ஆற்றல்களும், திறன்களும் ஒடுக்கப்படுகின்றன; மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைக்கப்படுகின்றன. அவர்களின் ஆர்வமும் ஊக்கமும் மழுங்கடிக்கப்படுகின்றன. வேண்டாவெறுப்புடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)


## உலக ஆசிரியர் தினமான இன்று

எமது ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்!

மாணவர்கள்,
பழைய மாணவர்கள் சங்கம்,
பாடசாலை அபிவிருத்தி சங்கம்,
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

(சி-3239)

''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே''.
இத்தகைய கல்வியை ஊட்டும் அனைத்து ஆசிரியர்களையும்
வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைவது ...

பருத்தித்துறைக் கல்விக்கோட்டம்.

(சி-3231)

## உலக ஆசிரியர் தின ஆசிகள்

அறியாமை இருள் அகற்றி
அறிவுச்சுடர் ஏற்றி
எம்மை வளர்த்து வரும்
எம் மதிப்பிற்குரிய ஆசான்களை
சகல பாக்கியங்களும் பெற்று
பெரு வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

மாணவர்கள்
யா/வல்வை மகளிர் மகா வித்தியால்யம்,
வல்வெட்டித்துறை.

(சி-3232)

## உலக ஆசிரியர் தினம்

'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவன்'

உலக ஆசிரியர் தினமாகிய இன்று (06-10-96) யாழ்/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய ஆசிரியர்களின் கல்விப்பணி தொடர்ந்து சிறப்படைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அத்துடன் மேற்படி வித்தியாலயத்தில் 06-10-96 இல் நிகழும் ஆசிரியர் தினவிழா சிறப்படையவும் வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்:
விநாயகர் சனசமூக நிலையம்,
ஒற்றுமை விளையாட்டுக் கழகம்,
தொண்டைமானாறு.

(06-10-96) (43032)

மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

## ஆசிரியர்கள் வாழிய வாழியவே!

பெரும் மதிப்பிற்கும், மேதக்க குணங்களுக்கும் உரித்தான நல்லாசான்களாகிய மேற்படி பாடசாலை ஆசிரியர்கள் தம் சேவையை சமூகத்திற்கு வழங்கி மாணவர்களை வளம் படுத்தி உயர்ந்தவர்கள். அவர்களை இவ் ஆசிரியர் தினத்தில் வாழ்த்துவதில் பெருமைப்படுகின்றோம். அவர்களுக்கு நல்லாரோக்கியத்தையும், மன அமைதியையும் இறைவன் அருளவேண்டுமென இறைஞ்சுகின்றோம்.

மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.
பருத்தித்துறை. (சி/3235)

## ஆசிரியர் தினம் ஒக்ரோபர் - 06

ஒளிர்கின்ற விளக்காக இருக்க எமக்கு ஒளி ஏற்றிய அனைத்து ஆசிரியர்களுக்கும் எமது நல்லாசிகள்.

மாணவர்கள்,
அபிவிருத்திச் சங்கத்தினர்,
பழைய மாணவர்கள்.
யா/கெருடாவில் இ. த. க. பா.
தொண்டைமானாறு.

(சி-3243)

## நீடூழி வாழ்க நிலைத்து

அதிபரே, எம்மினிய ஆசிரியப் பெருமக்காள்!
மூதுமையால் இளைப்பாறும் மூத்த ஆசிரியோரே,
இதுநாள் வரையும் எம்மை வழிநடத்தி
புதுமை மிகு கல்வி புகட்டி, உரமூட்டி
செம்மை நெறி செய்த சீரியரே
அகில உலகத்து ஆசிரியர்நாள் இன்று
அல்லல் அகன்று உங்கள் ஆயுள் பலமாகி
நீடூழி வாழ்க நிலைத்து.

மாணவர்கள்,
யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.
பருத்தித்துறை.

(சி-3244)

## வாழ்த்துகிறோம்

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் நீண்டகாலம் ஆசிரியராகவும், சிரேஷ்ட உதவி ஆசிரியராகவும், பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாளராகவும் பணியாற்றி அண்மையில் இளைப்பாறிய

திருமதி நீலாம்பிகை நாகராஜா

அவர்களையும், இப்பாடசாலைக்கு அரும்பணியாற்றி வரும் அதிபர், ஆசிரியர்களையும் உலக ஆசிரியர் தினமான இன்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழையமாணவர் சங்கம், மாணவர்கள்.
யா/ புனிதஜோண்பொஸ்கோ வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(43044)

## உலக ஆசிரியர் தினம்

கல்வி என்ற சுடரொளி எம்முன் பாய்ச்சி
கல்லூரித் தனித்துவத்தை நிலையாய் நாட்டி
இளையோரின் அகத்தினிலே அறிவை ஊட்டி
எம்மையெலாம் மேன்மையுறச் செய்து உயர்த்தி
முன்னாளின் இந்நாளின் ஆசான் தம்மை
முத்தான அதிபர்கள் குழாம் எல்லாம்,
எந்நாளும் எம் மனதில் இருத்திப் போற்றி
ஏத்துகின்ற எம்பணியை என்றும் காப்போம்!

மாணவர்கள்
யா/ ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

(சி/3234)

## உலக ஆசிரியர் தினம்

அதிபர், ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்!

மாணவர்கள்
யா/ புலோலி மெ. மி. த. க. பாடசாலை.
புலோலி. (சி/3233)

# ரஷ்யா உட்பட மூன்று நாடுகள் கூடி ஆப்கான் நிலைமையை ஆராய்ந்தன

## மத்திய ஆசிய எல்லையின் பாதுகாப்பு குறித்து அச்சம்

மொஸ்கோ ஒக். 6

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் தலியான் படைகளிடம் வீழ்ச்சி அடைந்ததை அடுத்து மத்திய ஆசிய எல்லைப் பகுதிகளில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக ரஷ்யாவும் மற்றும் சில மத்திய ஆசிய நாடுகளும் அஞ்சுகின்றன.

நேற்று முன்தினம் கஜகஸ்தானின் தலைநகரான அல்மாத் நகரில் ரஷ்யா, கஜகஸ்தான், உஸ்பெக்கிஸ்தான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் அவசர மாநாடு ஒன்றை நடத்தினர்.

ஆப்கானிஸ்தானில் உடனடியாக யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரவேண்டும் என்றும்—

சமாதானத் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும்— இந்த மாநாடு கோரிக்கை விடுத்துள்ளது.

ரஷ்யக் குடியரசுகளின் நிலப் பகுதிகளுக்குள் தலிபான் படைகள் நுழைய முற்பட்டால் அதன் விளைவுகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெயின் ஆணைக்குழு முன் கருணாநிதி ஆஜராவார்

சென்னை, ஒக். 6

ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பின்னால் ஏதாவது சதி முயற்சிகள் இருக்கின்றனவா என்பது குறித்து ஆராய்ந்து வரும் ஜெயின் ஆணைக்குழு முன் எதிர்வரும் 11ஆம் திகதி ஆஜராகுமாறு தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி கேட்கப்பட்டுள்ளார்.

இந்த ஆணைக்குழு முன் முன்னாள் இந்தியப் பிரதமர் வி. பி. சிங் நேற்று ஆஜராகவிருந்தார்.

முன்னாள் உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான், நிதியமைச்சர் பி. சிதம்பரம், முன்னாள் தமிழக அமைச்சர் செல்வி. ஜெயலலிதா ஆகியோரும் விசாரணைக்கு ஆணைக்குழுவால் அழைக்கப்படவிருக்கின்றனர்.

இவர்கள் அடுத்த மாதம் ஆணைக்குழு முன் ஆஜராவார்கள். (இ-3)

# நற் சமுதாயத்தைப் படைக்கும்...

( 3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்படுவோரின் எண்ணிக்கை கூடுகின்றது ஆசிரிய வாண்மையின் வளர்ச்சி தறுக்கணிக்கின்றது. அவர்களின், தனிநபர் சமூக தேசிய பங்களிப்பு படிப்படியாகக் குன்றுகின்றது. ஆசிரியர்களே தாம் ஆசிரியர் என, அடையாளங் காணப்படுவதை தவிர்க்குமளவிற்கு சமூகத்தில் ஒதுக்கப்படுகின்றனர். வாயினால் சொல்ல முடியாத தொழிலாக மாறிவிட்டது ஆசிரியம் என்று கூறின். சுள்ளிட்ட ஞாபகங்கள் உள்ளவர்களுக்கு தூண்டல் உணர்திறன் (Induction Skill) மிக்கோருக்கு மிகைப்படக் கூறலாக இருக்காது.

### இல்லாவிட்டால் என்ன

கல்வியின் அவசியமும், மகிமையும் அறியப்படாத காலத்தில், ஆசிரியர் ஒரு முதலாந்தர வீட்டு வேலைக்காரன் என்று அன்றொருகால் கருதப்பட்ட நிலைக்கு, இன்றைய ஆசிரியர்கள் தள்ளப்பட்டு விடுவார்களோ என்று அஞ்சவேண்டிய போக்குகள் காணப்படுகின்றன.

தொழிலிடவசதிகள், தொழில்துறைவசதிகள் எதுமில்லாமல் தொழில் புரியவே அருகதையுடையவர்கள் ஆசிரியர்கள் என்ற எண்ணம் பொதுவாக நிலவுகிறது என்று கூறின் மறுப்பவர் அரிதாகவேயிருப்பர். ஆறுமணித்தியாலங்கள் தானே! அடக்கிக் கொண்டிருந்தாலென்ன? தண்ணீர் குடியாவிட்டால் உயிரா போயிடும்? ஆறுவதற்கு அறையா அவசியம்? இருக்காவிட்டாலென்ன? நின்றுபடிப்பிக்கலாந்தானே? - இவைபோன்ற எண்ணங்களும், கூற்றுக்களும் எதனை எடுத்துக்காட்டுகின்றன? ஆசிரியர் 'ஒரு போடுதடி' என்ற எங்கள் அபிப்பிராயத்தைக் காட்டவில்லையா? வேறு உத்தியோகத்தவரென்றால், மின்விசிறியில்லாமல் அவர்கள் வேலை பார்க்க இணங்குவார்களா? என்று வியந்துரைப்போம். வெண்கட்டிகூட இல்லாமல் விரலால் வெளியில் அதாவது வளியில் எழுதிக் காட்டும் ஆசிரியருக்கு இவை நன்கு விளங்கும். வளங்களும், வசதிகளும் கிடைக்கப்பெற்ற ஏறக்குறைய 05 வீத பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் பெற்றோருக்கும் — ஏன் கற்பிக்கும் ஆசிரியர்களுள் சிலருக்கும் இவை கற்பனைகளாகவிருக்கலாம்.

### விதைக்குமுன் விளைவுணரும் கற்பனைத்திறன் தேவை

இன்றைய உலகில் எதனையும் நிச்சயிக்கும் கல்வியின் மையத் தொழிற்பாடான ஆசிரியம் தேய்வுறுமாயின், பின் தங்கல் மட்டுமன்றி பயங்கரமான விளைவுகளும் தவிர்க்க முடியாதனவாகிவிடும்.

அவை தவிர்க்கப்பட வேண்டுமாயின், வகுப்பறைத் தொழிற்பாடுகள் பரீட்சையுடன் மட்டும் நிற்காது, கல்வியின் அதி உன்னத இலக்குகளையும் குறிக்கோள்களையும் நிறைவேற்ற வேண்டும்.

அவற்றின் நிறைவேற்றம், ஆசிரியர்மேல் மாணவர்கள் கொண்டுள்ள அபிமானத்திலும், பெருமதிப்பிலுமே தங்கியுள்ளது.

இன்று பெற்றோரின் அவாவையும், மாணவர்களின் ஏக்கத்தையும் சூறையாடி வளரும் ''ரியூசனாலும்'' — கசடறக் கற்றவர்க்கும் பள்ளிக்கு அடியோடு செல்லாதவர்கட்கும் இடைப்பட்ட ''கல்விமான்களாலும்,, –

இவ்வபிமானமும் மதிப்பும் கருகிவிட்டன.

பொதுக் கல்விப்பாடத்திட்டங்களின் தரத் தொய்வும், பரீட்சைமுறைகளின் தளர்வும் இதற்கு உரமூட்டுகின்றன.

கல்வியதிகாரிகளின் — அத்தொகுதி உயர் பதவியினரின் — பகிரங்கமான அவமதிப்பும், அச்சுறுத்தலும் இதற்குத் தூபமிடுகின்றது.

ஆசிரியர்கள் பற்றிக் கூறப்படும் நல்லவை, தீயவை எதுவும் மாணவர் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல்தைப்பது மட்டுமன்றி நின்று தொழிற்படத் தொடங்கிவிடும். பாடசாலை சென்றவர் எவர்க்கும் இது புதிதல்ல. ஆசிரியர்களின் உயர்வுகள் மட்டுமே பகிரங்கமாகக் கூறப்படக்கூடியவை. குறைகள் கூறப்படின் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களே தீயவை பேச ஆயத்தம் தேவையில்லை. கேட்பவருக்கும் இனிமையாகவிருக்கும்.

ஆனால் ஆசிரியருக்கு எதிராகச் செலுத்தப்படும் அம்பு மாண்வரை நோக்கியே செல்லும் என்பதை நாம் உணரவில்லையெனில் விளைவுகள் வேதனையானவையே.

ஆசிரியரின் குலம், கோத்திரம் சொல்லிக் கொடுத்துப் பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்பும் பெற்றோருமுளர். இது மாணவரின் உள்ளத்தில் நிரந்தரமாகக் குடிகொள்வதால் வகுப்பில் ஆசிரியரின் பாட ஊக்குவிப்புத் (Motivation) தொழிற்பட முடியாது போகின்றது.

எங்கள் வீடுகளில் எங்கள் பிள்ளைகளின் நன்மை கருதி எங்கள் பேச்சு, செயல், நடையுடை ஆகியவற்றில் எவ்வளவு கட்டுப்பாடும், கண்ணியமும் பேணுகின்றோமோ அது போன்று வெளியேயும் அதாவது சமூகத்திலும் அங்ஙனம் பேணுவது எங்களின் சமூகக் கடப்பாடாகும். 'பிறர்பிள்ளை தலை தடவத் தன் பிள்ளை தானே வளரும்' என்பதன் கருத்து இதுவாக இருக்கலாம்.

### வாழ்க்கைக் கோலமாக அமைய வேண்டும்

'ஆசிரியர் தினம்', 'சிறந்த ஆசிரியர் விருது' ஆகியவை ஆசிரியர் மேல் அபிமானத்தையும், பெரு மதிப்பையும் மீண்டும் கட்டியெழுப்ப எடுக்கப்படும் முயற்சிகளே. ஆனால் அவை அன்றுடன் முடிவடையும் சம்பிரதாயம், விழா, நன்றிக்கடன் போன்ற இடத்தையே பிடிக்கின்றன.

அப்பண்புகள் மாணவரின் குறிப்பாகப் பெற்றோரின், அதிகாரிகளின் வாழ்க்கைக் கோலமாக—பற்றுக்கோடான செயற்பாடாக — அமையவில்லை.

ஆசிரியர்களுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கைகளை, அவர்கள்மேல் சுமத்தப்படும் குற்றங்களை முதல் நாள் பத்திரிகைகளில் படித்த மாணவர்கள், அடுத்த நாள் ஆசிரியர் தினத்தன்று மாலையுடன் செல்வதென்றால் அவர்களுக்கே கேலிக் கூத்தாக அல்லது கேள்விக் குறியாகவிருக்கும்.

ஆசிரியர் தினத்தன்று போற்றப்படுவது போன்று, நாள்தோறும் போற்றப்படவேண்டியவர்கள் ஆசிரியர்கள்.

இற்றைக்குச் சில தசாப்தங்களுக்கு முன்பு ஆசிரியரின் பெயரைக்கூடப் பிள்ளைகள் உச்சரிக்க, அன்றைய பெற்றோர் அனுமதிக்கமாட்டார்கள். கல்யாண குணங்கள் நிரம்பிய இலட்சிய புருஷராகவே ஆசிரியரை, அன்று மக்கள் மதித்தனர்; மாணவர் கண்டனர். புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்து போன்ற மேலைத் தேயப் பல்கலைக்கழகங்களில் பெரும் பெரும் பட்டங்கள் பெற்றவர்கள் அன்று ஆசிரியவாண்மையில் பிரவேசித்தமைக்கு இப்பெருமதிப்பே காரணம் போலும்.

### வளர்ந்ததும் மறக்கின்றனர்

தினங்கள் போன்றவற்றால் உள்ளங்கள் தூண்டப்பட்டுப் பிறக்கும் நல்லெண்ணத்தில் தங்கியிருப்பது ஆசிரியவாண்மையின் நியதியல்ல. அதற்கென வெளிப்படையாக அவதானிக்கப் படக்கூடிய, அளவிடப்படக்கூடிய இயல்புகள் ஏராளம். சேவை முதிர்வு, சேவை வரலாற்றுச் சிறப்பு, கல்விசார் பங்களிப்பு, பல்துறைப் புலமை, மேலாக வகுப்பறை இயக்கம் (Class room Dynamics), கலவித் தொழில் நுட்பவியல் (Educational Technolcgy) ஆகியவை அவற்றுட் சில. இவை போன்று இன்னும் எத்தனையோயிருந்தும் அவற்றினடிப்படையில், ஏனைய துறைகளிற் போன்று, உயர்மட்டங்களை - பதவிகளை - அடையக் கூடிய பதவிப்படிநிலைகள், அவற்றிற்குரிய சம்பளத் திட்டத்துடன் ஆசிரியவாண்மையில் இன்று வரை ஏற்படுத்தப்படாமை, ஆசிரியவாண்மைக்கும் ஆசிரியர்களுக்கும் இழைக்கப்படுகின்ற அநீதி என்றே கூறவேண்டும்.

இன்றேல் எழுத்துப் பெயர் 'உதவியாசிரியர்' — அழைப்புப் பெயர் 'ஆசிரியர்' என இருக்குமா?

### உதவியாசிரியரிலிருந்து தவிசாசான்

உதவியாசிரியரிலிருந்து ஆசிரியர் — முதன்மையாசிரியர் — ஆசிரிய நாயகம் — தவிசாசான் — என்ற ஒழுங்கில் அல்லது வேறு பொருத்தமான, வரவேற்கத்தக்க பதவிப் படி நிலைகளினூடாக பதவி உயர்வுபெற வழி வகுப்பது இன்றைய அவசரமான — அவசியமான — காரியம் என்பதை, இன்று பாடசாலைகளில், மாணவர்களில், இளந்தலை முறையினரில், நாம் அவதானிக்கும் நடைமுறை விவகாரங்கள் வலியுறுத்தி நிற்கின்றன.

ஆசிரியருக்குப் பலத்தையும், பலவீனத்தையும் கொடுக்கின்ற பாடசாலை வளங்களும், குறிப்பாக அவ்வப் பாடசாலைகளில் கற்கும் மாணவர் தரமும் கருத்திற் கொள்ளப்பட்டு, முன்பு கூறப்பட்டவற்றின் அடிப்படையில் பதவியுயர்வு விசுவாசமாக, பாரபட்சமின்றி நடைமுறைப் படுத்தப்படின், அவ்வப் பதவிகளுக்கு ஏற்றவர்கள், தகைமையுடையவர்கள், அவற்றிற்கு முந்திய பதவிப் படியிலிருந்துதாமாகமிதப்பர்.

### ஆசிரியம் — தனியொரு தொழிற்பாடன்று

இவ்வித புனரமைப்பால் ஆசிரிய வாண்மையின் வளர்ச்சியும், முற்பெயர்வும் ஊக்குவிக்கப்படும். ஆசிரியர்மேல் வளர்ந்தவர்க்கும் — பெற்றாருக்கும் — அவர்களினூடாக மாணவருக்கும் அபிமானமும், மதிப்பும் ஏற்படும். பாலுடன் நல்ல பழக்கவழக்கம், ஒத்திசைவு, பணிவு, வீரம், பற்று, மொழி போன்ற இன்னோரன்ன பண்புகளை குழந்தைக்கு ஊட்டும் தாய் போன்று — நீர்பாய்ச்சி பசளையிட்டு, களைபிடுங்கி, பீடை நீக்கி, பயிர்வளர்க்கும் விவசாயிபோன்று — ஆசிரிய வாண்மையின் பன்முகத் தொழிற்பாடுகளை நிறைவேற்ற ஆசிரியர்கள் தூண்டப்படுவர்; அவர்களின் கண்ணும் கருத்தும் மாணவரின் ''வளர்ச்சியை'' சுற்றியே சதா வட்டமிடும்; பாடசாலைகளில் நிலவும் பற்றாக்குறைகள் அவர்களின் அறிவு, திறன், யூகத்தால் நிவர்த்தி செய்யப்படும்; பாடசாலைகளில் ஏற்கனவே கட்டியெழுப்பப்பட்டு, அவற்றின் தனித்துவத்தை எடுத்தியம்பி நிற்கும்மறை பாடவிதானமானது மறைந்து போனவும் அதனை வளர்க்கவும் பேணவுப் அவர்கள் முற்படுவார்கள். அதாவது வகுப்பறை இயக்கமானது பயிற்சிப் புத்தகத்துடன் முடிவடையாது, சில தசாப்தங்களுக்கு முன்பு இருந்தது போல் மீளவும் புத்துயிர்ப்படையும்.

இவ்வித புத்துயிர்ப்பு ஏற்படின் கற்பித்தல் மிளிரும்; கல்வியின் தரம் உயரும், கல்வியில் நாட்டங்குறைந்த மாணவர் ஆசிரியருக்குச் சவாலாக அமைவர். அங்கு ஆசிரியரின் அதிதிறமையும், அர்ப்பணமும் வெளிவரும். எல்லா மாணவரும் கல்வியில் தேர்ச்சி பெறுவர். இடைவிலகலின் அதிகனதியான காரணி மறையும். இளந்தலைமுறையினர் பொறுப்புணர்வுடன் தொழிற்படுவர். மனித சமூக, நெறிமுறை, பண்பாட்டுப் பெறுமதிகள் (Values) உதாசீனப்படுத்தப்படும் நடத்தைகள் மாணவரில் தலைதூக்கமாட்டா; பகிடிவதை (Ragging), கும்பல் மனப்போக்கான (Mobmentalirg) குழப்பங்கள் போன்றவை நிந்தனையான வீண்செயல்கள் என்ற விளக்கமும், நிதானமும் மாணவரில் ஏற்படும். ஆசிரியவாண்மை தரங்குன்றிவிட்டது — பொருத்தமில்லாதவர் அதனுள் புகுந்துவிட்டனர் — என்ற பேச்சுக்கு இடமில்லாது போகும் கல்வியின் இலக்குகள் தவறாது நிறைவெய்தும். உடலும் உளமும் உணர்வும் உயர்நெறியும் ஒன்றிணைந்தியங்குகின்ற பூரணமான மனிதர்களாக (CouPlete Men) மாணவர்கள் வளர்வார்கள் பரீட்சைக்காகப் படித்தவர் கைகளில் எங்கள் வாழ்வு சிக்காமல் படித்தபடி நிற்பவர்களில் ஒப்படைக்கப்படும். ★


## அனைவருக்கும் உளநலம் - 06

### இடைக்கூறு வயது — வாழ்வின் முக்கிய திருப்புக்கட்டம்.

★ ஒருவரது வாழ்வின் இடைக்கூறு, 35 வயதளவில் ஆரம்பிக்கும். இதனை வாழ்வின் இரண்டாம் பாதியின் தொடக்க காலம் என்பர்.

★ ஒருவர் வாழ்வின் இலக்குகளை மீள்மதிப்பீடு செய்யும் பருவம் இது.

★ இதுவரை எய்தப்படாத இலக்குகளுக்காக வருந்தி பின்தேறி, அடைந்த இலக்குகளை ஆர்வத்தோடு ஏற்று, புதிய இலக்குகளை வகுத்துக் கொள்ளும் காலமும் இதுவே.

★ இப்பருவத்தில் ஒருவர் இளமை, முதுமை; பற்றுநிலை, பற்றற்றநிலை; ஆண்மை, பெண்மை போன்ற இருமைப் பண்புகளை இணைத்து, அவ்விணைப்பின் ஒருமையினூடே, தனித்துவமான ஒருவராக வளர முற்படுவார்.

★ உருவாக்கம், தேக்கம் — இவை இரண்டிற்குமிடையிலான மோதலை ''இடைக்கூறுக்கால நெருக்கடி'' என்பர்.

# விரிவுரையாளரின் மனைவி, மகள் இனந்தெரியாதோரால் கடத்தல்

## அரசியல் பின்னணி காரணம் எனத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 6

ஐ. தே. க. ஆதரவாளரான பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரின் மனைவியும் மகளும் கடந்த வாரம் கொழும்பில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர்.

கடத்தல் காரர்கள் தாம் கடத்திய இருவரையும் விடுவிக்க விரிவுரையாளரிடம் இருந்து ஒருலட்சம் அமெரிக்க டொலர்களைக் கோரி உள்ளனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

அமெரிக்காவிலுள்ள அரிஷோனாபல்கலைக் கழகத்தில் இரத்தினக்கல் தொழில்நுட்ப விரிவுரையாளராக பி. ஜெயசூரியா பணியாற்றி வருகிறார்.

மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் ஜெயசூரியா தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் விடுமுறையில் அண்மையில் இலங்கை வந்திருந்தார்.

கொழும்பை அண்டிய பகுதியில் சொந்தமாக வீடொன்றை வாங்க அவர் எண்ணியிருந்தார்.

கடந்தவாரம் அவரது மனைவியும் ஆறு வயதான மகளும் அவர்களின் பெற்றோரைச் சந்திக்க மஹரகம சென்றிருந்தனர்.

மஹரகம விலிருந்த போது இவர்கள் இருவரும் கடத்தப்பட்டனர். இவர்கள் இருவரையும் விடுவிப்பதானால் தங்களுக்கு ஒரு லட்சம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை கடத்தல் காரர்கள் விதித்துள்ளனர்.

இது பற்றி ஜெபசூரியா பொறலஸ் கமுவ பொலீஸாருக்கு முறையிட்டார்.

கடத்தல் காரர்கள் ஆளும் கட்சி ஆதரவாளர்கள் என ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

தாம் ஒரு ஐ. தே. க ஆதரவாளர் எனவும் 1994 இல் களுத்துறை மாவட்ட ஐ. தே. கட்சியின் தேர்தல் பட்டியலில் தமது பெயரும் அடங்கியிருந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

தமது மனைவியும் மகளும் கடத்தப்பட்டதற்கு அரசியல் விரோதமே காரணம் எனவும் அவர் கூறினார்.

அரசியல் அழுத்தங்கள் காரணமாக தனது முறைப்பாடு குறித்து பொலீசார் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் —

தனது மனைவியும் பிள்ளையும் கடத்தப்பட்டது குறித்தும் கடத்தியோரின் விபரங்கள் குறித்தும் பொறளஸ்கமுவ பொலீஸ், குற்றப் புலனாய்வுப் பிரிவு, பிரதிப் பொலீஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா, பாதுகாப்பு அமைச்சின் செயலர் சந்திரானந்த டி சில்வா ஆகியோருக்கு முறைப்பாடு செய்துள்ளதாகவும் —

ஆனால் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் — அவர் தெரிவித்துள்ளார்.

அவருக்கு கொங்கொங்கில் இரத்தினக் கல் பட்டயம் தீட்டும் நிலையம் ஒன்றும் சிங்கப்பூரில் இரத்தினக்கல் விற்பனை நிலையம் ஒன்றும் உண்டு என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# மோசமாகப் பழுதடைந்த 14 வீதிகள் திருத்தப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 6

குடாநாட்டில், மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள 14 வீதிகள் விரைவில் திருத்தப்பட உள்ளன.

இதற்காக இரண்டாயிரம் பரல் தார் மற்றும் தேவையான உபகரணங்களை கப்பல் மூலம் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

யாழ். இந்து மகளிர் ஆரம்பபாடசாலை
யாழ்ப்பாணம்.

## நற்பணி ஆற்றிய அதிபர்

### திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா

அவர்கள் யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் முதல் அதிபர் இவர் யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், யா/யாழ். இந்துமகளிர் கல்லூரியிலும் 19 ஆண்டுகள் நல் ஆசிரியராகக் கடமையாற்றியவர். எமது பாடசாலையில் 17½ ஆண்டுகள் நல் அதிபராகக் கல்விப்பணியாற்றி 09 - 07 - 96 இல் தமது நிறைவான சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

அறிவு, ஆற்றல், ஆளுமை, கடமையுணர்வு மிக்க இவரது சகல நடவடிக்கைகளும், மாணவரை மையமாக வைத்து அமைந்ததாகும் பாடசாலையையும், மாணவரையும் வளர்த்தெடுப்பதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். சேவை மனப்பான்மையுடனும், மனித நேயத்துடனும், செயலாற்றியவர்.

அன்பு, அடக்கம், பொறுமை, அமைதியான சுபாவம், பண்பான வார்த்தைகள், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறன் இவருக்கே உரித்தான குணாதிசயங்கள். குறைந்த வளங்களுடன் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்குப் பெரிதும் உதவியவர். மாணவர், ஆசிரியர், பெற்றோர், பழையமாணவர் யாவரினதும் நன் மதிப்பைப்பெற்ற இவர் கல்வி வளர்ச்சிக்கும், பாடசாலை அபிவிருத்திக்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

இவர் தனது குடும்பத்துடன், சிறந்த தேகாரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் பெற்று, வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள. உலக ஆசிரியர் தினமாகிய இந் நன்னாளில் ஒரு சிறந்த அதிபரை வாழ்த்துவதில் நாம் பெருமைப் படுகிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(42995)

## தசாப்த நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 05 — 1931

மறைவு: 06 — 10 — 1986

### திருமதி பிலோமினம்மா டானியல்

(மறைந்த, மக்கள் எழுத்தாளர் கே. டானியல் அவர்களின் துணைவியார்)

பத்தாண்டின் நினைவுச் சுவடுகளில்
பனிக்குதம்மா நம் கண்ணீர்ப்பூக்கள்
பெற்றாண்டு பேணி வளர்த்தாய் பிரிந்தாய்
தனித்தமம்மா நாம் உதிர்ப்பூக்கள்.

தங்கள் நினைவுகளில்!
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''வசந்தம்''
76/2 கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(42985)

# நிரந்தர மருத்துவ மாது இல்லை

வடமராட்சி, ஒக். 6

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி கிராமிய அரசினர் வைத்தியசாலையில் மருத்துவ மாது ஒருவர் நிரந்தரமாக இல்லாததால் கர்ப்பிணிகள். பிரசவத் தாய்மார்கள் பெரிதும் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

அத்துடன் இவ் வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் நிரந்தர மருத்துவ மாது இன்மையால், வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள மற்றொரு வைத்தியசாலையான அம்பன் அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு பிரசவத் தாய்மார்கள் செல்கின்றனர். (இ- 173)

எண்ணெய் இறக்க வசதியாக

# காங்கேசன்துறையில் கொள்கலன் நிறுவப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 6

குடாநாட்டில் எரிபொருள் விநியோகத்தைச் சீராக்க 5 கொள்கலன்கள் (Tank) காங்கேசன்துறைக்கு எடுத்து வரப்படவிருக்கின்றன என்று வடக்கு மீள்குடியேற்ற அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீர தெரிவித்தார்.

தற்சமயம் கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்து வரப்படும் டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றை. போதிய கொள்கலன் வசதியில்லாத காரணத்தால் களஞ்சியப்படுத்தி வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக எரிபொருளுடன் வரும் கப்பல் மாதக்கணக்கில் தரித்து நின்றே எண்ணெயை இறக்கிச் செல்கிறது.

இதனால் போதியளவு எரிபொருளை எடுத்து வர முடிவதில்லை.

தற்சமயம் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் 5 கொள்கலன்களை எடுத்து வந்து காங்கேசன்துறையில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இக்கொள்கலன்கள் வந்து சேர்ந்ததும், தற்சமயம் எரிபொருள் எடுத்து வரும் பணியில் ஈடுபட்டுள்ள கப்பல் மாதத்தில் இரு தடவை எரிபொருளை எடுத்து வரும் என்றும் —

இதனால் எரிபொருளுக்கு உள்ள தட்டுப்பாடு நீங்கிவிடும் என்றும் — அவர் தெரிவித்தார். (இ-3)

# வன்னிப்பகுதிக்கு மிகக்குறைந்த உணவுப் பொருள்

கொழும்பு, ஒக். 6

வன்னிப் பகுதிக்கு மாதாந்தம் 2 ஆயிரத்து 126 லொறி உணவுப் பொருள்கள் தேவையென கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் —

கடந்த செப்ரெம்பர் மாதம் ஆயிரத்து 353 லொறிகளில் மட்டுமே உணவுப் பொருள்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)


## ரொபி, இனிப்பு தயாரிப்பாளர் கவனத்திற்கு!

எங்களிடம் லிக்குவிட் (LIQUID) குளுக்கோஸ் கைவசம் உள்ளது. தேவையானோர் எங்களிடம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
சிவா நறுமண பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (43009)

## மொடேர்ன் எடியுகேசன் சென்ரர்

நெல்லியடி

07 - 10 - 96 பகல் நேர A/L வகுப்புகள் ஆரம்பம்

| | |
|---|---|
| தூய கணிதம்<br>பிரயோககணிதம் | திரு. வெக்டர் வேலாயுதம் |
| இரசாயனம் | திரு. வசீகரன் |
| பௌதிகம் | திரு. சூரியநாதன் |

திங்கள் 8 - 30 மணி தூய பிரயோககணிதம்

(43016) நிர்வாகி

## தையல் இயந்திரம் திருத்துதல் பயிற்சி

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் மகளிர்களுக்கான தையல் இயந்திரம் திருத்துதல் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது. பயிற்சியில் சேர விரும்புவோர். 15 - 10 - 96 இக்கு முன் சபையில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கவும்.

மாவட்டச் செயலாளர்

இல; 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி-3245)


## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 20 — 07 — 1947



விண்ணில்: 16 — 10 — 1987

### அமரர் கந்தசாமி சண்முகநாதன்

(பேபி)

திதி: 06 - 10 - 1996

எங்கள் குடும்பத்தில் குலவிளக்காய் ஒளிவிட்ட தெய்வமே! உங்கள் நினைவு எங்கள் இதயங்களில் என்றும் அழியாது.

இந்திரா குடும்பத்தினர்.

இராமலிங்கம் றோட்,
திருநெல்வேலி. (43041)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் பின்வரும் கால் நடை பருந்து வகைகள் நியாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். ரிலொக்ஸ், தயாகல், பிக்குற்றின். தேவையானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/3223)

தகரப்பந்தல், கதிரை, யன்னல், கிறில்ஸ் செய்த கதவுகள், பூச்சாடிகள், இரும்புத் தூண்பெட்டிகள், S- Lone Pipes and fitting முதலியன விற்பனைக்குண்டு. தொடர்பு: கே. துரைச்சாமி, இல· 106, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (43021)

எமது சங்கப்பண்ணையில் எரு விற்பனைக்கு உண்டு. விரும்புபவர்கள் எருவை பார்வையிட்டு கூறுவிலையினை 10-10-96 ஆம் திகதி 12 மணிக்கு முன் சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி-3242)

நவராத்திரி பூசை விசேட நாள்களில் பால், தயிர் தேவையானவர்கள் முன்கூட்டியே எமது பால் விற்பனைக் கிளைகளில் தங்களது பெயரைப் பதிவு செய்து கொள்ளவும். பொதுமுகாமையாளர், யாழ்மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி-3241)

### பயிற்சி வினாத்தாள்கள்

செப்ரெம்பர் மாத 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L வகுப்பு எல்லா பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன்பெற்றுக்கொள்ளலாம். Bond Institutes, 58A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (42921)

### இலவச திருமணசேவை

அரசாங்க உத்தியோகம் 30 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. ஞாயிறு மட்டும் 9 30 — 12.30 ஸ்ரீலங்கா அச்சகத்துக்கு அருகில் காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (42979)

### பயிற்சிப் பரீட்சை

ஆண்டு 3 முதல் O/L வரை சகல பாடங்களுக்கான மாதாந்த பரீட்சை 05-10-96 — 06-10-96 வரை நடைபெறும். வெளிமாணவர்களும் தோற்றலாம் 07-10-96 இற்குப் பின் வினாத்தாள்கள் வெளிவிடப்படும். புதிய நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (43015)

### பன்முக சேவை

சாதகங்கள் தொலைந்து விட்டனவா? குறைந்த கட்டணத்தில் எழுதப்படும். மணமக்கள் தேர்வுக்கு பதிவு செய்யுங்கள். கு. சிவபாலசுந்தரம்பிள்ளை, "வரோதயன்", திருவீதி, உரும்பிராய் வடக்கு. (43012)

### வாடகைக்கு

நல்லூரில் இரண்டு அறையும், குசினியும் கொண்ட பகுதிவீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: மே/பா. இல.537, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (43006)

### வீடு வாடகைக்கு

சாவகச்சேரி - கண்டி வீதியில் (சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கருகில்) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு இல; B; 23, கச்சாய் றோட், சாவகச்சேரி. (42999)

## UNIVERSITY OF JAFFNA, SRI-LANKA.

**Siddha Medicine New Admission 1995/96**

Applications are invited from the candidates who obtained passes in all the four subjects in the G.C.E.(A/L) Examination held in 1992/1993/1994.

Qualifications:

Passes in all four subjects- Chemistry, Botany, Zoology and Physics and should have obtained 180 marks or more.

Applications should be sent on specified form on payment of Rs. 20/- obtainable at the Examinations & Admissions Branch, University of Jaffna, Thirunelvely. Applications should reach this office on or before 1996-11-05.

**Registrar**
University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1996-10-02

(C/3229)

### மாணவர் செயற்திட்டம்

உலக ஆசிரியர் தினம்- ஒக்ரோபர் - 6. "மாதா பிதா குரு தெய்வம்". சிக்கனத்திற்கும், துரித சலவைக்கும். நுரை வளம்மிக்க மில்க்வைற் சலவைப்பவுடரைப் பாவித்து, வெற்றுப் பக்கற் 10 அனுப்பி "மாணவர் செயற் திட்டம்" என்ற நூலைப் பெற்றுக் கொள்ளலாம். "மில்க்வைற்" (சி-3219)

விற்பனையாளர், உதவியாளர் தேவை

நேரில் தொடர்பு கொள்ளவும்.

**டில்கா பேணிச்சர் பலஸ்**

இல: 441, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (வண்ணை சிவன்கோவில் சந்தி அருகில்) (43034)

**புதிய பிரிவு**

**SPOKEN ENGLISH**
by: BRITTO

செவ்வாய், வியாழன் 3 - 30 மணி நடைபெறுகிறது.

**சிவாகி**
கல்வி நிலையம் சாவகச்சேரி. (42978)

## A/L 96 DAY CLASSES

ஆரம்பம்:- 09—10—96 9 மணி

விவரங்களுக்கு: S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்

**பிறைற்வே இன்ஸ்ரிரியூட்**
மூத்தவிநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டை.

(இரு நிறுவனங்களிலும் நடைபெறும்). (42929)

மூளாய்
கூட்டுறவு வைத்தியசாலைச் சங்க

## வைத்திய சேவை
# மீளாரம்ப வைபவம்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்க **வைத்திய சேவை** பொதுமக்களின் தேவைக்காக **14 — 10 — 1996** திங்கட்கிழமை காலை 9-00மணி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது. வைபவத்தை பிரதிக் கூட்டுறவு ஆணையாளர்

திரு. கா. சந்திரராசா
(பிரதேச செயலர், மேலதிக அரசாங்க அதிபர்)
அவர்கள்

வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர் சபை
கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்,
மூளாய்.

மூளாய்,
(சி-3212)

## எமது வாடிக்கையாளர் கவனத்திற்கு!

எங்களிடம்:

- ★ மென்பான தயாரிப்பு பொருள்கள்
- ★ ஐஸ்கிறீம் தயாரிப்பு பொருள்கள்
- ★ எசன்ஸ் வகைகள்
- ★ மாஜரின் வகைகள்
- ★ இந்திய ஊதுபத்தி வகைகள்
- ★ நெய் வகைகள்
- ★ டை வகைகள்
- ★ றோயல் பேக்கிங் பவுடர்
- ★ றோயல் கஸ்டட் பவுடர்
- ★ றோயல் அறோறுட் [மா]
- ★ யோயல் குளுக்கோஸ்
- ★ றோயல் நீலம்
- ★ றோயல் சொக்கோ பவுடர்
- ★ றோயல் ஜெலடின்
- ★ நீயூ தீபா ஜெஸ்மின் ரல்க்
- ★ ரலகம் பவுடர் [சொரி]
- ★ உலர்த்திய தேங்காய் துருவில் D/C
- ★ ஜெலடின் லூஸ்
- ★ பபுஸ்கம்
- ★ கோன் புளவர்
- ★ பிஸ்கட் அமோனியா
- ★ ஐசிங் சுகர்
- ★ கோழிச்சாயம்
- ★ வெற்றுப் போத்தல் 1 அவுன்ஸ்

மற்றும் பல.

# சிவா நறுமண பூங்கா

இல: 288 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(43017)

# தபால் மூலம் கல்வி

எம்மால் மாதா மாதம் வெளியிடப்படும்

- ★ ஆண்டுகள்: 3, 4, 5, 6, 7, 8, 9, 10 (எல்லாப் பாடங்களும்)
- ★ ஆண்டு 5: புலமைப்பரிசில்
- ★ ஆண்டு 9: கனிஷ்ட தொழில் நுப்பச் சான்றிதழ் பரீட்சை வர்த்தகம் — மனைப் பொருளியல் — விவசாயம்
- ★ G.C.E. O/L: எல்லாப் பாடங்களும்
- ★ G.C.E. A/L: கணித — உயிரியல் — கலை — வர்த்தகப் பிரிவுகள் — எல்லாப் பாடங்களும்
- ★ போக்குவரத்து, நேர — வசதி இலாதவர்கள் தபால்மூலம் — வினாத்தாள்களுக்கு விடையளித்து தந்தால் விடைத்தாள்கள் — திருத்தப்பட்டு — சரியான விடைகளுடன் மீளளிக்கப்படும்.

ஆரம்பம்: **06 — 10 — 1996**

விவரங்களுக்கு:

பதிவாளர்
பரீட்சைப் பகுதி - **BOND INSTITUTES**
தபால்பெட்டி: 140, யாழ்ப்பாணம்.

(43030)

## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி



**பிலோமினம்மா டானியல்**

25 — 05 — 1931 06 — 10 — 1986

அன்புடன் நினைவு கூருகிறோம்.
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சுரதா

(43025)

உதயன்

## ஆசிரியர் நாள்

இன்று அனைத்துலக ஆசிரியர் நாள்.

சமூக வளர்ச்சியில் ஆசிரியர்கள் வகிக்கும் உன்னத பங்கை அங்கீகரித்து, அவர்களுக்கு மதிப்பளித்துப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் இன்றைய நாள் அமைகிறது.

ஒரு நாட்டின் மேம்பாடும் வளர்ச்சியும் அங்கு வாழும் மக்களின் அறிவு மட்டத்தைப் பொறுத்தே அமைகின்றன அந்த அறிவொளியை நாட்டின் எதிர்காலப்பிரஜைகளாக விளங்கப் போகும் மாணவர்கள் மத்தியில் ஏற்றி வைப்பவர்கள் ஆசிரியர்களே. எதிர்கால சமுதாயத்தைச் செதுக்கி வடிவமைத்து உருவாக்கிவிடும் சமூகச் சிற்பிகள் அவர்கள்.

அவர்களை வருடந்தோறும் வரும் ஒக்ரோபர் ஆறுகளில் பாராட்டி, கௌரவித்து, பரிசளித்துக் கொண்டாடுவதால் கல்வி அறிவுள்ள பண்பான சமுதாயம் உருவாகிவிடமாட்டாது.

மாதா, பிதா, குரு ஆகிய முத்தரப்பினரும் தெய்வங்கள் என்று கருதி அவர்களுக்கு மதிப்பளித்த பாரம்பரியத்தைக் கொண்டவர்கள் நாம். ஆனால் இப்போது அது இல்லை. மறந்துபோன விவகாரமாயிற்று. அதனால் தான் வருடத்தில் ஒரு நாள் இந்த மேளதாளங்களோ எனக் கருத வேண்டியுள்ளது.

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவன் என்று மாணாக்கரும், மக்களும் குருவுக்கு மதிப்பளித்த காலம் ஒன்று இருந்தது அதே போல ஆசிரியர் தொழில் தெய்வீகத் தொண்டு என்ற மனப் பாங்குடன் ஆசிரியர்கள் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றிய காலமும்ஒன்றுஉண்டு. ஆனால் மதிப்பைக் கொடுத்து எடுக்கும் சமூகச் சமன்பாடு இப்போது தேய்ந்து, தெரியாமல் அழிந்து போகும் வேதனைக்குரிய காலமாகிவிட்டது.

இந்த நிலை மாறி முந்திய மாண்புறு நிலை உருவாகினால் தான் எமது மக்களின் அறிவொளி தணிந்து விடாமல் மேலும் பிரகாசிக்க ஏதுவாகும்.

ஆசிரியர்களை மதிக்கவும் அவர்களுக்குப் பணிந்து நடக்கவும் மாணவர்கள் பின்னிற்பது போலவே, ஆசிரியர்களில் ஒரு சாரார் மாணவர் நலன் கருதியும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றுவதில் அக்கறை காட்டுவதில்லை என்பது பொதுவான இருபக்கக் குற்றச்சாட்டுகளாகும்.

இருசாராரும் ஒரு தரப்பு மீது அடுத்த சாரார் குற்றஞ் சாட்டித் தமக்குள் தீர்ப்பு வழங்கித் தண்டிக்கக் கூடிய விவகாரயல்ல இது: சமூக நலன் கருதி, நாட்டின் — மக்களின் — எதிர்கால நன்மை கருதி, இரு தரப்பாரும் திருந்திக் கொள்ள வேண்டிய தேவை உண்டு. இதற்கு இரு தரப்புகள் மத்தியிலும் புரிந்துணர்வும் நல்லுறவும் மிக அவசியம்.

கல்வி வளர்ச்சியிலும், நற்பிரசைகளை உருவாக்கும் பணியிலும் ஆசிரியர்களுக்கு மட்டுந்தான் பொறுப்புஉண்டு என்பதல்ல. அவர்களுடன் ஒத்துழைத்து சுமுகமான கல்விச் சூழலை உண்டாக்கும் பெரும் பொறுப்பு பெற்றோருக்கும் சமூகத்துக்கும் உண்டு.

இதனை எல்லாத் தரப்பினரும் புரிந்து கொள்ளவும் உணர்ந்துகொள்ளவும் அதன் வழி நின்று செயற்படவும், பணியாற்றவும் அனைத்துலக ஆசிரியர் நாள் வேண்டிய மனப் பதிவுகளை உண்டாக்கின் பெருங்காரியமாகி விடும்; சாதனையாகும் என்றும் சொல்லலாம்.

---

### இந்த மாத இறுதிக்குள்

# அரச ஊழியர் யாழ். திரும்பாவிடில் அவர்களின் இடத்துக்கு புது நியமனம்

### அனுருத்த தலைமையில் நடந்த மாநாட்டில் முடிவு

திருகோணமலை, ஒக். 6

யாழ். குடாநாட்டிலிருந்து வடக்கு - கிழக்கின் வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த அரச ஊழியர்கள் இம்மாத இறுதிக்குள் தத்தமது பழைய பணியிடங்களுக்குத் திரும்பி விட வேண்டும். இல்லையேல் அவர்களின் இடங்களுக்குப் புதியவர்கள் நியமிக்கப்படுவர்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை தலைமையில் அண்மையில் நடைபெற்ற அதிகாரிகள் கூட்டம் ஒன்றில் இத்தகைய முடிவு எடுக்கப்பட்டது.

அப்படி தமது பழைய பணியிடங்களுக்குத் திரும்பத் தவறும் அரசாங்க ஊழியர்களின் இம்மாதச் சம்பளமும் நிறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் பங்குபற்றினர். (உ–150)

---

### திருமலையில்

## கப்பலுக்கு காத்திருப்போர் தண்ணீரின்றி அவதி

கப்பலில் யாழ்ப்பாணம் செல்வதற்காக வவுனியாவில் இருந்து திருகோணமலைக்கு வந்துள்ள பயணிகள் தண்ணீர் தட்டுப்பாட்டினால் பெரிதும் கஷ்டப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் இருந்து வந்த 700 பயணிகள் திருகோணமலையில் இரு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 500 பேர் தங்க வைக்கப்பட்டிருக்கும் இடத்திலேயே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பவுஸர்கள் மூலம் அவர்களுக்கு தண்ணீர் வழங்கப்ட்டபோதும், அது போதாமல் இருப்பதாகக் கூறப்பட்டது. (இ–3)

---

## காங்கேசன் ஆலையிலுள்ள 4 பாரிய ஜெனரேட்டர்கள்

### சுவிஸ் உதவியுடன் திருத்தப்படும்

திருகோணமலை ஒக். 6

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் கடந்த ஆறு ஆண்டு காலத்துக்கு மேல் செயலிழந்த நிலையில் இருக்கும் நான்கு பாரிய ஜெனரேட்டர்களையும் திருத்துவதற்காக சுவிட்ஸர்லாந்தில் இருந்து நிபுணர் குழு ஒன்று விரைவில் இலங்கை வரவிருக்கின்றது.

இந்த நான்கு ஜெனரேட்டர்களையும் இயங்க வைத்தால் அவற்றின் மூலம் கணிசமான பகுதிக்கு மின்சாரம் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஜெனரேட்டர்களைத் திருத்துவதற்காக சுவிஸ் நிபுணர் குழுவை அழைக்கும் முயற்சியில் வெளிவிவகார அமைச்சு கொழும்பில் உள்ள சுவிட்ஸர்லாந்து தூதரகம் மூலம் ஈடுபட்டது என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ–150, 3)

---

## சொல்; செயல் வடிவம் பெறுவதே மனித மாண்பு

மனிதனுடைய வாழ்வில் பல தத்துவங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவனுடைய வாழ்விலும் அவனவனுக்கென்று தத்துவம் உண்டு. இயேசு தனது வாழ்வில் பல தத்துவங்களை வாழ்ந்து காட்டினார்; பல தத்துவங்களை எடுத்துரைத்தார். அவை சிலருக்கு கசப்பாக இருந்தன; பலருக்கு வாழ்வின் விழுமியங்களாகவும், ஏணிப்படியாகவும் இருந்தன.

இன்றைய நாளில் எமது சிந்தனைக்கு மிக முக்கியமான ஒரு வாழ்க்கைத் தத்துவத்தை எடுத்துரைக்கின்றார். உங்கள் பேச்சும், உங்கள் சொல்லும் செயல் வடிவம் பெற்றதாயிருக்க வேண்டும். மனித மாண்பைச் சித்திரிக்கும் தத்துவம்தான் ''ஆம்'' என்றால் ''ஆம்'' 'இல்லை' என்றால் 'இல்லை'.

### ஞாயிறு நற்பிரசாதம்

ஒருவனுடைய வாழ்வில் அவனது சிறப்பை எடுத்துக் காட்டுவது பொன்னும், பொருளும், பட்டமும் அல்ல. அவனது சொல்லும் செயலும் தான். நல்ல மனிதனாக வாழ வைப்பது செயல்தான். இன்னும் ஒரு படி முன்னேறிப் பார்த்தால், நேரம், இடம். சாதி, சமயம் பாராது ஆம் என்று சொல்பவனே மனிதருள் மாணிக்கமாகத் திகழ்கின்றான். போட்டி, புகழ், பெருமை போன்ற மனப்பான்மையை விட்டு எல்லோரும் சகோதரர்கள், எல்லோரும் கடவுளால் படைக்கப்பட்டவர்கள் என்ற நிலை உருவாக நாம் உழைக்கவேண்டும்.

'ஆம்' என்ற சொல் புனிதமும், தூய்மையும் நிறைந்த சொல். அழைப்பிற்கு 'ஆம், என்று சொல்லுகின்றோம். வாழ அழைப்புப் பெறும் போது, 'ஆம்' என்று ஆசையுடன் சொல்லிய நாம், எப்படி எமது வாழ்க்கை அமைந்திருக்கின்றது என்று சிந்தித்துப் பார்க்க நல்ல தருணம் கிடைத்துள்ளது. கஷ்டங்கள், துன்பங்கள், கவலைகளால் வருந்தும் மக்களுக்கு, என் சொல்லிலும் செயலிலும் எனக்கும் ஒரு தத்துவம் இருக்கின்றது என்ற உணர்வு வர வேண்டும்.

''கிறிஸ்து இயேசுவில் இருந்த மன நிலையே உங்களிலும் இருப்பதாக.''

—அருட்திரு
சாள்ஸ்கொலின்

### நாளை

புரட்டாதி 21
திங்கட்கிழமை
திதி: தசமி
பிற்பகல் 12.49 வரை.
நட்சத்திரம்: ஆயிலியம்
முழுநாளும்
ராகுகாலம்: 7.32—9 02
சுப நேரம்: 12.02—1 32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

## குடாநாட்டில் சிறைச்சாலை

குடாநாட்டில் குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவோரை விளக்கமறியலில் வைப்பதற்காக சிறைச்சாலை ஒன்று விரைவில் அமைக்கப்படவிருக்கின்றது;

இது தொடர்பான கட்டட வேலைகளை யாழ். பிரதிப் பொலீஸ் மா அதிபர் மேற்பார்வை செய்வார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

---

## நினைவுதினம் அனுஷ்டிப்பு

1987 ஒக்ரோபர் 5ஆம் திகதி பலாலி இராணுவத் தளத்தில் வைத்து சயனைட் உட்கொண்டு மரணித்த குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரெண்டு விடுதலைப் புலிகளின் நினைவு நாள் நேற்று வலிகாமம் தென் மேற்குப் பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை, மானிப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டை, சுழிபுரம் மற்றும் பகுதிகளில் வாழை தோரணங்கள் கட்டப்பட்டு சிவப்பு, மஞ்சள் நிறக் கொடிகள் பறக்க விடப்பட்டு, பன்னிரெண்டு பேரின் உருவப்படங்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

சில முக்கிய சந்திகளில் ஒலி பெருக்கி பொருத்தப்பட்டு கீதங்கள் ஒலிக்க வைக்கப் பட்டன.

மௌன அஞ்சலியுடன் சில இடங்களில் உரைகளும் நிகழ்த்தப்பட்டதாகத் தெரிய வருகிறது. (இ-145)

---

### நள்ளிரவு பாம்பு கடித்தது:

## உரியநேரத்தில் சிகிச்சை பெறமுடியாததால் மரணம்

யாழ்ப்பாணம் ஒக் 6

பாம்புக் கடிக்கு ஆளான பெண் ஒருவர் தகுந்த சிகிச்சையை உரிய நேரத்தில் பெறமுடியாத நிலையால் உயிரிழந்தார்.

சாவகச்சேரி, மறவன் புலவில் நேற்று அதிகாலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த விசாகப் பெருமாள் பத்மினி (வயது 25) என்ற பெண்ணே மரணமானவராவார்.

நேற்று அதிகாலை ஒரு மணி அளவில் படுக்கையில் வைத்து இவரை பாம்பு தீண்டியதாகவும் —

வாகன வசதியற்ற நிலையிலும், ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தாலும் உடனடியாக இவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல முடியாது விடிந்த பின்பே ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர் என்றும் —

காலை 8 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவசர சிகிச்சையை மேற்கொண்ட போதிலும் சிகிச்சை பலனளிக்காததால் அங்கு இவர் மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ.15)

---

## அரச கட்டட திருத்த வேலை இங்குள்ளவர்களே செய்வர்

கொழும்பு, ஒக். 6

வலிகாமம் பகுதியை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பின்னர் அங்குள்ள அரச கட்டடங்களை திருத்துவதற்கென கொழும்பில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட பணியாளர்கள் மற்றும் மின்சார ஊழியர்கள் மீண்டும் கொழும்புக்கு திரும்பும் பட்சத்தில் அந்தத் திருத்த வேலைகளை யாழ்ப்பாணத்தில் உள்ள பணியாளர்களைக் கொண்டே தொடர வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உத்தரவை ஜனாதிபதி விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ–3-150)

---

## நெடுந்தீவு படகுச்சேவையை சீராக்கக் கோரிக்கை

நெடுந்தீவு, ஒக். 6

நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் புறப்படும் பயணிகள் படகுக்கென ஒரு சீரான நேரம் இல்லாததால் குறிகாட்டுவானில் மக்கள் பஸ்ஸை தவறவிட்டு மாலை வரை குறிகாட்டுவான் துறைமுகத்தில் தங்கி நிற்கவேண்டி ஏற்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையை நீக்கும் பொருட்டு நெடுந்தீவில் இருந்து பயணிகள் படகு புறப்படுவதற்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தை நிர்ணயிக்கும்படி நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது சம்பந்தமான கடிதத்தின் பிரதிகள் யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர், நெடுந்தீவு ஈ. பி. டி. பி. பொறுப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன (இ-111)

---

## புதிய அதிபர்கள் நியமனம்

திருகோணமலை, ஒக். 6

யாழ்ப்பாணத்தில் இரு பிரபல தேசியப் பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் பெரிய புலம் ம. வி. அதிபராகக் கடமையாற்றி வந்த திரு. க கனகசிங்கம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் —

அச்சுவேலி ம. வி. அதிபராகக் கடமையாற்றி வந்த திரு. க. இராஜதுரை யாழ் மத்திய கல்லூரிக்கும் —

நியமிக்கப்பட்டிருப்பதாக வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. சு டிவகலாலா தெரிவித்தார். (உ–150)

---

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 6

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக சிறுவர் பாடசாலை மெய்வல்லுநர் போட்டி இன்று நடைபெறுகின்றது:

கழக மைதானத்தில் போட்டிகள் இன்று நண்பகல் 1.00 மணிக்கு ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் கலந்து கொள்வார். (அ)

## மரண அறிவித்தல்கள்

### சிவா. கதிரமலை J. P

கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த சிவா கதிரமலை J. P அவர்கள் 30-09-96 அன்று வவுனியாவில் காலமாகி விட்டார்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,

187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(43036)

### நடராசா ஆபிரகாம் ஜெயசிங்கம்

''உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்'' - சங். 91:1

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ஆபிரகாம் ஜெயசிங்கம் 04 - 10 - 96 அன்று காலமானார்.

இவ்வறிவித்தலை உறவினர், விசுவாசிகள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். அன்னாரின் நல்லடக்கம் நேற்று நடைபெற்றது.

தகவல்:
அமத்சியா (குமரன்)

மானிப்பாய் வீதி,
தாவடி வடக்கு.

(43039)

திருமதி
### பாக்கியம் பொன்னுத்துரை

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் தட்டாதெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் பொன்னுத்துரை 96 - 10 - 05 ஆம் திகதி சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வர்த்தகர் திரு. ஆ பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், சி. பொன்னுத்துரையின் (கொக்குவில்) அன்புச் சகோதரியும், மகேசலிங்கம் (கட்டிட ஒப்பந்தக்காரர்), காலஞ்சென்ற இந்திராணி, ஆனந்தலிங்கம் (சாலைப்பரிசோதகர் — இ. போ. ச.), சந்திரலிங்கம் (இளைப்பாறிய தொழில் நுட்பவியலாளர்), புஸ்பராணி, யோகராணி, அற்புதராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவரட்ணம் (இளைப்பாறிய P. W. D. ஓவசியர்), கமலாதேவி, புஸ்பராணி, கனகம்மா, சண்முகசுந்தரம் (அதிபர், யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்ஷினி, சசிகலா, மனோராஜ், தயாந்தினி, சதீஸ், குமரேஸ், வித்யா, ஸ்ரீகஜன், ஸ்ரீதக்ஷன், ஸ்ரீறோபன், ஸ்ரீ பிரியா, ஸ்ரீநிமல், ஸ்ரீஜெனனி, சிந்துஜா, அனோஜா, நிருஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கந்தர்மடத்தில் இன்று 6 - 10 – 96 ஆம் திகதி காலை 10 00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக மதியம் 12.00 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பொ. மகேசலிங்கம் (மகன்)
பொ- ஆனந்தலிங்கம் (மகன்)

154/8 'B', ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(43046)

### செல்லையா நடராசா

(இளைப்பாறிய C. I D பொலீஸ் உத்தியோகத்தர், நுணாவில்குளம் கண்ணகை அம்மன் கோயில் உப தலைவர்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லையா - நடராசா 03-10-96 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா, அபிராமிப்பிள்ளை தம்பதிகளின் புத்திரனும் காந்திமதியின் அன்புக் கணவரும், இராஜதேவி, ஸ்ரீதேவி (ஜேர்மனி), ஜெகதேவி (ஆசிரியை, டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி), வனஜாதேவி, தவராசா (ஜேர்மனி), தாமராதேவி (நோர்வே) சுமித்திராதேவி, சித்திராதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தயாசரத், இராஜலிங்கம் (ஜேர்மனி), இராசரத்தினம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நிர்மாணத்துறை திணைக்களம், யாழ்ப்பாணம்), அர்த்தநாரீஸ்வரன் (அப்பன் மிளகாய் வாணிபம், சாவகச்சேரி), விக்னகுமார் (நோர்வே), துஷ்யந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் குமாரசாமி (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தரும், நுணாவில்குளம் அம்மன் கோயில் தலைவரும்), படைவீரசிங்கம், மதியாபரணம், மகேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்றவர்களான மாசிலாமணி, துரைராஜா ஆகியோரின் சகோதரரும், மனோகரன், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், மகேசன், மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் சஞ்ஜீவன், விக்டர் (ஜேர்மனி), தசிதரன், சாருஜன், வாமணன், பிரணவன், சபீனன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6-10-96) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

கல்வயல் வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(43042)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 06-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## பரீட்சை முடிவுகள்

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா (1994 — 1995 ஆம் ஆண்டு) பயிற்சிநெறியின் முதலாம் வருட பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பெறுபேறுகளை யாழ். இந்துக் கல்லூரி நிலையத்தில் பார்வையிடலாமென யாழ். கல்வி வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது. (அ)

## ஆயுதம் வாங்க மேலும் 60 கோடி ரூபா

படையினருக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக மேலும் அறுபது கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கான குறை நிரப்பு பிரேரணை நாளை மறுதினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது அதனுடன் சேர்த்து இந்தக் குறைநிரப்பு பிரேரணையும் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த குறை நிரப்புப் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருக்கின்றது. (உ-150)

## கலைஞர்கள் ஒன்றுகூடல்

திருமறைக் கலா மன்றத்தின் ஆதரவில் கலைஞர்கள் ஒன்று கூடலும் 'தொடுகை' கையெழுத்துச் சஞ்சிகை அறிமுகமும் இன்று நடைபெறுகின்றன.

மன்றத்தின் கேட்போர் அரங்கில் புதிய நேரப்படி மு. ப 11 - 30 மணிக்கு இந் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். (அ-51)

### மருதமுனை—

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் மாவை சேனாதிராசா அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய தீ மிதிப்பு விழாவுக்குச் சென்று விட்டு திரும்பிய மட்டக்களப்பு மாவட்ட தமிழ்மக்கள் எட்டுப் பேர் மருதமுனையில் வைத்து வாகனத்துடன் எரிக்கப்பட்டிருப்பதும் —

கல்முனையைச் சேர்ந்த தொழிலாளர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டதும் —

மிகுந்த வேதனையைத் தருகிறது. இது ஒரு திட்டமிட்ட செயலாகும் — என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

### 3 கப்பல்களில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னியா வந்துள்ளவர்களில் மேலும் 100 பேர் நேற்று திருகோணமலை வந்துள்ளனர் என்றும் —

தற்சமயம் 600 பேர் யாழ். செல்ல திருகோணமலையில் தங்கியுள்ளதால் வவுனியாவில் இருந்து மேலும் அகதிகளை அனுப்ப வேண்டாம் என்று திருகோணமலை மேலதிக அரச அதிபர் வவுனியா அரச அதிபரை கோரியுள்ளதாகவும் கூறப்பட்டது. (இ-3)

### ரஷ்யா உட்பட...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மோசமானவையாக இருக்கும் என்றும் மாநாடு எச்சரித்துள்ளது.

அதே சமயம் விதிமுறைகளை அப்பட்டமாக மீறி ஆட்சி அமைத்துள்ள தலிபான் மீது நடவடிக்கை எடுக்க ரஷ்ய நாடாளுமன்றம் நேற்று அழைப்பு விடுத்தது.

ஆப்கானுக்கு ஆயுதங்கள் வழங்குவதை உடனடியாக நிறுத்தும்படி உலக நாடுகளை ரஷ்ய நாடாளுமன்றம் கேட்டுள்ளது. (இ-10)

## பாப்பரசர் ஆஸ்பத்திரியில் அனுமதி

பாப்பரசர் திருத்தந்தை 2 ஆம் அருள். சின்னப்பர் ''அப்பென்டிசைட்'' சத்திர சிகிச்சைக்காக நேற்று ரோமாபுரியிலுள்ள பிரபல எமல் டி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதற்கிடையில் பாப்பரசருக்கு வயிற்றில் புற்றுநோய் ஏற்பட்டுள்ளது என பரவிய வதந்திகளை வத்திக்கான் மறுத்துள்ளது. (இ-10)

### அகதிகள் . . .

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

குறித்து இரு வெளிவிவகார அமைச்சர்களும் விரிவாக ஆராய்ந்தனர்.

ஈழ அகதிகள் உணவுக் கஷ்டத்தால் இந்தியா வரவில்லை என்றும் —

இந்தியாவின் அனுதாபத்தைப் பெறுவதற்காக இவர்களை விடுதலைப் புலிகள் அனுப்புகின்றனர் என்றும் — இப்பேச்சுக்களின்போது லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது இருநாடுகளும் பொருளாதாரத்துறையில் ஒத்துழைப்பது குறித்தும் இரு அமைச்சர்களும் கலந்துரையாடினர். (இ-3)


பெற்றோர்களே!

உங்கள் குழந்தைகள்
வலது குறைந்த பிள்ளைகளாக
மாறாமல் பாதுகாக்க –
போலியோ என்ற கொடிய நோய்
உங்கள் குழந்தைகளைத்
தாக்காமல் தடுக்க –

குடாநாடு முழுவதிலும் அடுத்த சனிக்கிழமை
சொட்டு மருந்து கொடுக்கப்படவுள்ளது
இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைப்பது அரிது!

நினைவில் கொள்ளுங்கள்
இம்மாதம் 12 ஆம் திகதியை

PolioPlus

குழந்தைகள் நலனே
எதிர்கால சுபீட்சம்


## மரண அறிவித்தல்கள்

### இயக்கோமுத்து ஞானம்மா

(சில்லாலை தெற்கு)

சில்லாலை தெற்கைச் சேர்ந்த இயக்கோமுத்து ஞானம்மா 4 - 10 – 96 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தொம்மைப்பிள்ளை இயக்கோமுத்துவின் அன்பு மனைவியும், ஹென்றி யோசப் (புகையிரத நிலைய அதிபர், லண்டன்), புவிராசசிங்கம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச சபை, சாவகச்சேரி, சரசாலை உப அலுவலகம்), எட்வேட் இராஜநாயகம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை, யாழ்ப்பாணம்), பீற்றர் கனியூட் (சுவிற்சலாந்து), அருளானந்தம் (சுவிற்சலாந்து), திருமதி டெய்சி ஜீவரட்ணம், காலஞ்சென்ற பற்றிக் இம்மானுவேல், ஜோண் பொஸ்கோ (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சம்சுன், காலஞ்சென்றவர்களான மேரி பற்றிமா, யோகறஞ்சினி (உரிமையாளர்கள், பிரபாகர் பார்மசி, முல்லைத்தீவு), விவியன், இமெல்டா, இந்திரா, ஸ்ரெலா, L H.J. ஜீவரட்ணம் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பூநகரி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை (06 - 10 - 96) பி.ப. 3-00 மணிக்கு (பழைய நேரம்) யாழ்ப்பாணம், கதீட்ரல் வீதி, 26 ஆம் இலக்க இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியைத் தொடர்ந்து யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்;
திருமதி டெய்சி ஜீவரட்ணம்
(மகள்)

26, கதீட்ரல் வீதி,
யாழ்ப்பாணம்.

(43052)

### திருமதி புஸ்பா அலெக்சாண்டர்

திருமதி புஸ்பா அலெக்சாண்டர் 13-09-96 இல் வன்னியில் காலமானார்.

இவர் அலெக்சாண்டரின் (அலெக்ஸ் ரெயிலர்) அன்பு மனைவியும், வின்டர், தனுஜா, மொறீன், இறித்திக்கா ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
வேலுப்பிள்ளை றட்ணசிங்கம்
(நண்பன்)

பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.

(43049)